[21st January 1961

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ தியாகராஜன் அவர்களும் ஸ்ரீ வேதரத்தினம் அவர்களும் "தேசத்துரோகம்" போன்ற வார்த்தைகள் உபயோகப்படுத்தினுர்கள். இனி இம் மாதிரி கேள்வி நேரங்களில் கடுமையான வார்த்தைகள் உபயோகப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : சட்ட ரீதியாக அவர்களுடைய உரிமைகளை பெறுவதற்காக வேண்டி நடந்த அந்த போராட்ட நேரத்திலே அந்தப் போராட்டத்தை உடைப்பதற்கு கருங்காலி வேலை செய்தவர்கள் எத்தனை பேர்கள்? அவர்கள் பேரில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா?

Mr. SPEAKER : இப்பொழுது வேதரத்தனம் பிள்ளை அவர்களுக்குச் சொன்னதை உங்களுக்கும் சொல்கிறேன். அவர்கள் ஒரு வழியில் கேட்டார்கள், நீங்கள் வேறு வழியில் கேட்கிறீர்கள்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த வேலை நிறுத்தம் சட்ட ரீதியாக நடைபெறவில்லை. அவசரச் சட்டம் போட்ட பிறகு நடந்தது, சட்டத்திற்கு விரோதமாக. இதில் கலந்து கொண்டவர்கள்தான் சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொண்டவர்கள். மேலே நான் அவர்களைப் பற்றி குறிப்பிடவில்லை.

Sri A. A. RASHEED : May I know the extent of damage caused to the Government property during the general strike?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I am sorry. I have no such information with me. But I may tell the hon. Member that there is not any considerable damage on account of the strike.

Artesian wells

* 47 *Q.*—**Sri T. R. RAMAMIRTHA THONDAMAN (on behalf of Sri S. RAMALINGA PADAYACHI) :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, உடையார்பாளையம் தாலுக்காவில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர் ஊற்றுக்கிணறுகள் தோண்டும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியாயின் எங்கே, எவ்வளவு செலவில் தோண்டப்படும்?

21st January 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir. There is no such proposal at present. A scheme for sinking artesian wells in the State has been included in the Third Five-Year Plan, but the selection of areas where the wells are to be sunk will be decided only when the scheme for each year during the Plan period is formulated and sanctioned.

(*b*) Does not arise.

SRI S. LAZAR: ஆர்டீஷன் வெல்ஸ் போடுவதற்கு அங்கு வாய்ப்பிருக்கிறதா? அப்படியானால் அதை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு என்ன தடையிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உடையார்பாளையம் தாலுக்காவில் ஆர்டீஷன் வெல்ஸ் போட வாய்ப்பு இருக்கிறது. ஏற்கனவே 50 கிணறுகள் எடுப்பதற்கு சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அது கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தக் கேள்வி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உடையார்பாளையத்திற்கு எவ்வளவு என்பது. ஒவ்வொரு தாலூக்காவிற்கும் எவ்வளவு என்று இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. அப்போதைக்கப்போது கவனிக்கப்படுமென்று விடையளித்தேன்.

SRI S. LAZAR: அங்கிருக்கக்கூடிய குடிதண்ணீர் பிரச்னை மிகவும் கடுமையாக இருப்பதால் இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதால் குடிதண்ணீர் பிரச்னை தீரும் என்ற அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமில்லை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே 50 ஆர்டீஷன் வெல்ஸ் சாங்க்ஷன் செய்யப்பட்டதென்று சொன்னேன். அந்தந்த ஆண்டில் என்னென்ன முடியுமோ அவை எடுத்துக்கொள்ளப்படும்.

Pension rules

* 48 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the pension rules have been revised to benefit retiring persons; and

(*b*) if so, the details thereof and the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(b) A statement [a] is placed on the table of the House.

SRI T. S. RAMASWAMI: May I know the number of persons who have been benefited by this change?

THE HON. SRI C. SUBRAMANIAM: The number of persons who will benefit will be the number of persons who will retire after 1st July 1960.

---

a Printed as Appendix I on pages 233–234 *infra*.